# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2002 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

---

*(2002 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 4 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2002. ஒற்றோபர் மாதம் 4 ஆந் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 4.75 | தபாற் செலவு : ரூபா 4.50

# 2002 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

[2002 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 4 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ. — ஒ. 17/2002
4690

## குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக.

1. இச்சட்டம் 2002 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 495 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— 101 ஆம் அத்தியாயத்தின் 495 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

"கூட்டு எதிராளி நியமிக்கப்படலாம்.

495. சித்தசுவாதீனமுள்ளவரும் பூரணவயதினரும், பராயமடையாதவரின் அக்கறைக்கு எதிரான அக்கறை இல்லாதவருமான கூட்டு எதிராளியொருவர், வழக்கிற்கான பாதுகாவலராக நியமிக்கப்படலாம் ; ஆனால், வழக்காளியொருவர் அவ்வாறு நியமிக்கப்படுதல் முடியாது.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 544 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 544 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் —

"(ஆ) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து இரண்டாம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் நியதிகளின்படி பதிவு செய்யப்பட்ட அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கம்பெனியொன்றிலுள்ள ஏதேனும் பங்கு ; அல்லது" ; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வருவதனை சேர்ப்பதன் மூலமும் :—

இப்பிரிவின் நோக்கங்களுக்காக "பங்கு" என்பது, 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

2-H 16434-700 (2002/07)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.